முத்தமிழறிஞர் கலைஞருக்கு பேனா நினைவுச் சின்னம் அமைப்பது;

# ஒன்றிய அரசின் உரிய அனுமதியோடுதான் நடைபெற்றது!

## சட்டப்பேரவையில் — எ.வ.வேலு பேச்சு!

சென்னை, ஆக. 30- முத்தமிழறிஞர் கலைஞருக்கு பேனா நினைவுச் சின்னம் அமைப்பது ஒன்றிய அரசின் உரிய அனுமதியோடு தான் நடைபெற்றது என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் கொறடா எ.வ.வேலு பேச்சுகையில் தெரிவித்தார்.

சட்டமன்றத்தில் நேற்று முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு நினைவுச் சின்னம் அமைப்பது தொடர்பாக நடந்த விவாதத்தின் போது தி.மு.க. கொறடா எ.வ.வேலு அவர்கள் பேசியதாவது ...

முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மறைவுக்குப் பிறகு அவருடைய நினைவாக கடற்கரையில் பேனா நினைவுச்சின்னம் அமைக்க வேண்டும் என்பது கவிஞர்கள் எழுத்தாளர்கள் பல்கலைக்கழக துணை வேந்தர்கள் ஆகியோருடைய கோரிக்கையாகும்,



அதனை பொதுப்பணித் துறை சார்பாக ஏற்றுக் கொண்டு பொதுமக்களுடைய கருத்துக்களை கேட்டறிந்து ஒன்றிய அரசாங்கத்திற்கு மனு அளித்தோம். அதன் அடிப்படையில் ஒன்றிய அரசாங்கத்தினுடைய சுற்றுப்புற சூழல் நினைவுச் சின்னம் அமைக்க அனுமதி அளித்தது, மேலும் ஒன்றிய அரசம் இத்திட்டத்திற்கு அனுமதி அளித்தது,

இந்நிலையில் இது தொடர்பாக முன்னாள் முதலமைச்சர் தளபதி அவர்களிடம் கேட்டபோது இது அவசியமா என்று கேட்டார், இன்றைய பொருளாதாரத்திற்கு இது தேவையில்லை என்றும் கூறினார், மேலும் தமிழ்நாடு பொருளாதாரம் எப்பொழுது சீராகிறதோ அன்றைக்கு வைத்துக் கொள்ளலாம் என்றும் அவர் கூறினார், இதுதான் எங்கள் தலைவருடைய மனப்பக்குவம் என்பதை இந்த அவையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

அமெரிக்காவின் 'கிராண்ட் செஸ் டூர்' போட்டியில்

'சாம்பியன்' பட்டம் வென்ற முதல் இந்திய வீரர்!

# ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் பெருமை தேடித் தந்துள்ளார்!

பிரக்ஞானந்தாவிற்கு - சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து!



சென்னை, ஆக. 30- சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ட்விட்டர் பதிவு வருமாறு:

அமெரிக்காவில் நடைபெற்ற 'கிராண்ட் செஸ் டூர்' போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற, முதல் இந்திய வீரர் என்ற புதிய வரலாறு படைத்துள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த செஸ் வீரர் தம்பி பிரக்ஞானந்தா அவர்களுக்கு எனது பாராட்டுகள்!

உலகின் முன்னணி வீரர்களை எதிர்கொண்டு, தனது அபாரமான திறமை மற்றும் தன்னம்பிக்கையால் இந்த வெற்றியை அவர் பெற்றிருப்பது தமிழ்நாட்டுக்கு மட்டுமின்றி ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் பெருமை.

தம்பி பிரக்ஞானந்தா மென்மேலும் பல உலக சாதனைகளைப் படைக்க என் அன்பும், வாழ்த்தும்!

இவ்வாறு அப்பதிவில் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

CMDA நிதியில் கழக அரசு மேற்கொண்ட திட்டங்கள் அனைத்தும்

# மக்களுக்குப் பயன்படும் திட்டங்களே!

## வீட்டுவசதித் துறை மானியக் கோரிக்கையில் — முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேச்சு!

சென்னை, ஆக.30- வீட்டுவசதித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் முன்னாள் அமைச்சர் பி.கே. சேகர்பாபு பேசியதாவது:



திட்ட அனுமதிக்குத் தேவையான 17 துறைகளை ஒருங்கிணைத்து, 2022ஆம் ஆண்டு ஒற்றைச் சாளர முறை கணினிமயமாக்கப்பட்டு, அன்றிலிருந்து மனுக்கள் பெறப்பட்டு வருகின்றன.

துறையில் இருந்த ரூ.2,000 கோடிக்கு மேலான வைப்பு நிதியிலிருந்து செலவு செய்யப்பட்டதாக கூறப்பட்டது. மக்களிடமிருந்து FSI, கூடுதல் FSI போன்ற கட்டணங்கள் மூலம் வசூலிக்கப்படும் பணம் மீண்டும் மக்களுக்கான திட்டங்களாகச் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில்தான் 135 பணிகளை எடுத்தோம்.

பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள், மருத்துவமனைகள், படிப்பகங்கள் போன்ற மக்களின் அத்தியாவசிய தேவைகளுக்கான திட்டங்கள் இதில் அடங்கும். எம்.எஸ். சுவாமிநாதன் பெயரில் வரலாற்றுச் சிறப்புமிக்க போரூரில் அமைக்கப்பட்டுள்ள ஈரநிலைப் பூங்கா, கடந்த ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

இந்த 135 திட்டங்களுக்கும் சேர்த்து சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் எடுத்துக்கொண்ட தொகை ரூ.1,228 கோடி. அதில் கிட்டத்தட்ட ரூ.900 கோடி அளவிலான 35 பணிகள் நிறைவேற்றப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேலும், பிற துறைகளை ஒருங்கிணைத்து ரூ.1,200 கோடிக்கு அரசிடமிருந்து அரசாணை பெறப்பட்டுள்ளது.

வடசென்னை வளர்ச்சித் திட்டம் என்ற பெயரில் ரூ.7,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அந்தத் தொகை முழுவதும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் பணம் அல்ல; அரசு சார்ந்த பல்வேறு துறைகளின் பணமும் அதில் அடங்கியுள்ளது என்பதை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மேலும், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் பெறப்படும் FSI பணத்திலிருந்து 2024-25ஆம் ஆண்டில் ரூ.500 கோடி அரசுக்கு வழங்கியுள்ளோம். இந்த வகையில் 2027-28 வரை கணக்கிட்டால் ரூ.1,800 கோடி அரசுக்குச் சென்றடைகிறது.

அவ்வாறு வழங்கப்படும் பணத்தைத் திரும்பப் பெறுவதற்கும் அரசிடம் ஒப்புதல் பெற்றுள்ளோம். கடைசியாக பிப்ரவரி மாதத்தில் கூட ரூ.250 கோடி திரும்பப் பெற்றிருக்கிறோம்.

"தொலைநோக்குப் பார்வையுடன்தான் இந்தத் திட்டங்களை எடுத்தோம். இவை அனைத்தும் மக்களுக்குப் பயன்படுகின்ற திட்டங்கள். வீணாகக் கடலில் கரைக்கப்படுகின்ற திட்டங்கள் அல்ல" என்பதை பேரவைத் தலைவர் வாயிலாக அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேசினார்.

# கரூர் மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. அறிக்கை!

கரூர், ஆக. 30- கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கரூர் மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் இன்று (30.08.2026 - ஞாயிற்றுக் கிழமை) காலை 11.00 மணிக்கு கரூர் மாவட்ட கழக அலுவலகம் (கலைஞர் அறிவாலயம்) தளபதி அரங்கில் மாவட்டக் கழக அவைத் தலைவர் டி.ராஜேந்திரன்



தலைமையில் கரூர் மாவட்ட செயற்குழுக் கூட்டம் நடைபெற உள்ளது.

அதுசமயம் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், கழக பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் பொறுப்பாளர்கள், மாவட்ட அனைத்து அணி அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்

பொருள்: 1.22.08.2026 அன்று அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தலைமை செயற்குழுக் கூட்டத்தில் கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின்படி பகுதி, நகர, ஒன்றிய, பேரூர் கழகம் மறுசீரமைப்பு குறித்து 2. கழக வளர்ச்சி பணிகள்

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

த.வெ.க.வினருக்கு 'பார்ட்டி ஃபண்ட்' தர மறுத்ததால் போர்வெல் பணியில்

# ரூ.65 ஆயிரம் கூடுதலாகக் கேட்ட த.வெ.க.வினருக்கு டெண்டர்!

## தமிழ்நாடு அரசுக்கு ரூ. 6.5 லட்சம் இழப்பு!

மயிலாடுதுறை, ஆக. 30- தமிழ்நாட்டில் பொய்யான செய்திகளை பொதுமக்களிடம் பரப்பி சினிமா மோகத்தில் ஆட்சிக்கு வந்து திறமையற்ற ஊழல் ஆட்சி நடத்தி வரும் விஜய் தலைமையான தவெக அரசு தூய சக்தி என்று தங்களுக்கு தாங்களே தப்பாட்டம் அடித்துக் கொண்டு தமிழ்நாட்டில் பெரும் ஊழல் செய்து வரும் நிலையில் மயிலாடுதுறை மாவட்டத்தில் ஒப்பந்த பணிக்கு தவெகவினரின் ரூ 4 லட்சம் மதிப்பிலான பணியை ரூ 3.30 லட்சத்தில் செய்து தர ஒப்பு கொண்டு டெண்டர் கோரியவர் டெண்டரை ரத்து செய்து ரூ 3.95 லட்சம் டெண்டர் கோரிய தவெக ஒன்றிய செயலாளருக்கு டெண்டர் வழங்கியதற்கு ஒப்பந்தக்காரர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். 4 ஆண்டுகளாக ஒப்பந்தப் பணிகள் செய்ய விண்ணப்பித்து கிடைக்காத நிலையில் கடந்த இரண்டு மாதத்திற்கு முன் விண்ணப்பித்த த.வெ.க. வினருக்கு சால்வஸ் வழங்கியதற்கும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

மயிலாடுதுறை ஊராட்சி ஒன்றியத்தில் 10 இடங்களில் தலா ரூ.4 லட்சம் மதிப்பில் போர்வெல் அமைத்து மின் இணைப்பு வழங்குவதற்கான டெண்டரில், குறைந்த தொகைக்கு டெண்டர் எடுத்தவரிடம் 10 சதவீதம் பார்ட்டி ஃபண்ட்' கேட்டதாகவும், அதற்கு மறுப்பு தெரிவித்ததால் அவரது ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டதாகவும் பரபரப்பு புகார் எழுந்துள்ளது.

மேலும், குறைந்த தொகைக்கு டெண்டர் எடுத்தவருக்கு ஒப்பந்தம் வழங்காமல், அதிக தொகைக்கு ஏலம் கேட்டவருக்கு வேலை வழங்கப்பட்டதால் அரசுக்கு சுமார் ரூ.7 லட்சம் வரை இழப்பு ஏற்பட்டுள்ளதாக ஒப்பந்ததாரர் ஒருவர் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்துள்ளார்.

மயிலாடுதுறை பெருந்தோட்டம் பகுதியைச் சேர்ந்த அப்துல் அகத் என்பவர் ஒப்பந்தப் பணிகளை செய்து வருகிறார். மயிலாடுதுறை ஊராட்சி ஒன்றியத்தில் 10 இடங்களில் போர்வெல் அமைத்து மின் இணைப்பு வழங்கும் பணிக்காக ஒப்பந்ததாரர் மூலம் துணை ஒப்பந்தம் வழங்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இதற்காக ரூ.40 ஆயிரம் முன்வைப்புத் தொகையை அப்துல் அகத் தனது வங்கிக் கணக்கிலிருந்து செலுத்தியுள்ளார். தலா ரூ.4 லட்சம் மதிப்பிலான பணிக்கு ரூ.3.30 லட்சம் என குறைந்த தொகைக்கு டெண்டர் கோரியுள்ளார்.

டெண்டர் திறக்கப்பட்ட மறுநாளே, 10 சதவீதம் 'பார்ட்டி ஃபண்ட்' வழங்க வேண்டும் என தவெக மாவட்டச் செயலாளர் தரப்பில் கேட்கப்பட்டதாக அப்துல் அகத் தனது புகாரில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர், நான் ஏற்கனவே 18 சதவீதம் தள்ளுபடி செய்து இந்த வேலையை எடுத்துள்ளேன். மேலும் 10 சதவீதம் வழங்க என்னால் முடியாது என தெரிவித்ததாக கூறப்படுகிறது.

இதையடுத்து 3 நாட்களுக்குப் பிறகு அவரது ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டதாகவும், உடனடியாக ரூ.40 ஆயிரம் முன்வைப்புத் தொகை அவரது வங்கிக் கணக்கில் திரும்ப செலுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து விசாரித்த போது, ரூ.4 லட்சம் மதிப்பிலான பணியை ஏற்கனவே ஒப்பந்தம் கோரிய வரைவிட ரூ.65000 கூடுதலாக ரூ.3.95 லட்சத்திற்கு டெண்டர் எடுத்த ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டிருப்பது தெரியவந்ததாக அப்துல் அகத் கூறியுள்ளார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த அவர், குறைந்த தொகைக்கு டெண்டர் எடுத்தவருக்கு ஒப்பந்தம் வழங்காமல், மயிலாடுதுறை ஊராட்சி ஒன்றிய அதிகாரிகள் அதிக தொகைக்கு ஏலம் கேட்டவருக்கு டெண்டர் வழங்கியதன் மூலம் அரசுக்கு பண இழப்பு ஏற்பட்டுள்ளதாகக் கூறி மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியரிடம் புகார் மனு அளித்துள்ளார்.

மேலும், லஞ்சம் மற்றும் ஊழலற்ற ஆட்சி என கூறும் தவெக தரப்பினர், 10 சதவீத 'பார்ட்டி ஃபண்ட்' கேட்டு பணம் வசூலிப்பதுடன், அரசுக்கும் நிதி இழப்பை ஏற்படுத்தியுள்ளதாக அவர் தனது புகாரில் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்த விவகாரம் குறித்து உடனடியாக விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதற்கிடையே, சீர்காழியைச் சேர்ந்த திலீபன் என்பவர் கூறுகையில், தாங்கள் கடந்த 4 ஆண்டுகளாக ஒப்பந்ததாரர்களிடம் ஒப்பந்தப் பணிகளுக்காக விண்ணப்பித்து வருவதாகவும், இதுவரை வாய்ப்பு கிடைக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

இதுபோல் சுமார் 10 பேர் ஒப்பந்தப் பணிக்காக காத்திருப்பதாகவும் அவர் கூறினார். கடந்த ஜூன் மாதம் ஒப்பந்ததாரருக்கு மனு அளித்த மயிலாடுதுறை கிழக்கு ஒன்றிய தவெக செயலாளர் சேத்தூர் முருகேசனுக்கு ஒப்பந்ததாரர் உரிமம் கிடைத்ததைத் தொடர்ந்து, தற்போது அதிக தொகைக்கு ஏலம் எடுத்து 3 டெண்டர்களைப் பெற்றுள்ளதாக அவர் குற்றம்சாட்டினார்.

10 ஆண்டுகளாக துணை ஒப்பந்ததாரராக பணியாற்றி அனுபவம் இருந்தும் எங்களுக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. ஆனால் புதிதாக வந்த தவெக ஒன்றியச் செயலாளருக்கு சால்வன்சி சான்று மற்றும் ஒப்பந்தப் பணிகள் கிடைப்பது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது என அவர் தெரிவித்தார்.

ஊழலற்ற ஆட்சி நடத்துவதாக கூறும் நிலையில், தவெக ஒன்றியச் செயலாளருக்கு சான்றிதழ்கள் மற்றும் ஒப்பந்தப் பணிகள் கிடைத்திருப்பது குறித்து உரிய விசாரணை நடத்த வேண்டும் என்றும், தகுதியுள்ள தங்களுக்கு அரசு ஒப்பந்தமும் அதற்கான உரிமம் வழங்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

குறிப்பேடு — கொண்டையாங்குப்பம் கிராமங்களை

# இரண்டாகப் பிரித்து வருவாய் கிராமங்களாக உருவாக்குவீர்!

## சட்டப் பேரவையில் எஸ்.அம்பேத்குமார் வலியுறுத்தல்!

சென்னை, ஆக.30 குறிப்பேடு - கொண்டையாங்குப்பம் கிராமம் இரண்டையும் பிரித்து வருவாய் கிராமமாக உருவாக்க வேண்டும் என்று பேரவையில் வந்தவாசி எஸ்.அம்பேத்குமார் வலியுறுத்தினார்.

இது குறித்து பேரவையில் எஸ்.அம்பேத்குமார் பேசியதாவது:

வந்தவாசி வட்டத்திற்குட்பட்ட நல்லூர் கிராமம் என்பது மிகப்பெரிய வருவாய் கிராமம். அதையொட்டியுள்ள கொண்டையாங்குப்பம் கிராமம் என்பது தனி பஞ்சாயத்து.

நல்லூர் கிராமம் தனி பஞ்சாயத்து. கொண்டையாங்குப்பம் கிராமம் தனி பஞ்சாயத்து. ஆனால், வருவாய் கிராமம் என்று பார்த்தால், கொண்டையாங்குப்பம், நல்லூர் வருவாய் கிராமத்திற்குட்பட்டது. தனி வருவாய் கிராமமாக மாற்றித்தர வேண்டும் என்பது அந்த மக்களின் நீண்டநாள் கோரிக்கை.



அதேபோல, வெளியம்பாக்கம் என்பதும் மிகப்பெரிய கிராமம். அதையொட்டியுள்ள குறிப்பேடு கிராமம் தனி பஞ்சாயத்து. அதுவும் வெளியம்பாக்கம் வருவாய் கிராமத்திற்குட்பட்டுள்ளது. அரசு நிகழ்ச்சி களில் கலந்து கொள்வதற்கும், அரசு திட்டங்களைப் பெறுவதற்கும் மக்கள் நெடுதூரம் சென்று பெற வேண்டியுள்ளதால் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, இந்த குறிப்பேடு கிராமத்தையும், கொண்டையாங்குப்பம் கிராமத்தையும் இரண்டாகப் பிரித்து வருவாய் கிராமமாக உருவாக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



கழக இளைஞரணி அறக்கட்டளை சார்பில் இளைஞர் அணிச் செயலாளர் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கோபிசெட்டிபாளையம் சட்டமன்றத் தொகுதியில் வசிக்கும் கழக முன்னோடி கோ.கா.முத்துச்சாமிக்கு மருத்துவ செலவிற்காக 25,000 ரூபாய்க்கான காசோலையை அனுப்பி வைத்தார். அதனை ஈரோடு வடக்கு மாவட்டக் கழக செயலாளர் என்.நல்லசிவம் நேரில் சென்று வழங்கினார். நிகழ்வில் இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் திருவேங்கடம், கோபிசெட்டிபாளையம் நகரச் செயலாளர் என்.ஆர்.நாகராஜ் ஆகியோர் உடன் உள்ளனர்.

# கோவையில் முதியவர் சரமாரி வெட்டிப் படுகொலை!

## கடந்த 28 நாட்களில் அரங்கேறிய10 கொலைகள்!

கோவை, ஆக. 30 - கோவை அருகே 55 வயதான முதியவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. த.வெ.க ஆட்சியில் தொடரும் கொலை சம்பவத்தால் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

கோவை நரசிபுரம் அருகே கலைமகள் கல்லூரி பகுதியில் 55 வயதான நாகராஜ் என்பவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார். விசாரணையில், அவரது நண்பரான கந்தசாமி கத்தியால் தாக்கி கொலை செய்தது தெரியவந்ததைத் தொடர்ந்து, அவரை ஆலாந்துறை போலீஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். ஆகஸ்ட் மாதம் தொடங்கியதில் இருந்து கோவை மாவட்டத்தில் இதுவரை 10 கொலைச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளதாக கூறப்படும் நிலையில், அடுத்தடுத்து நடைபெறும் கொலைகள் பொதுமக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.